திரு. கே. ஏ. வகாப் : இந்த நகராட்சியினுடைய வருவாயும், பொருளாதார நிலையும் மிகவும குறைந்திருக்கிற காரணத்தினால் அரசு கொடுத்து வருகிற உதவிகளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இனிமேலும் ஆசிரியர்கள் துன்பத்திற்கு உள்ளாகாதிருக்க முதல் தேதியே சம்பளம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தணிக்கையைப் பார்த்து அவர்களுக்கு மானியம் வழங்க வேண்டுமென்று இருந்தாலும் அங்குள்ள நிதி நெருக்கடியை ஆலோசித்து அவர்களுக்கு முன்பணமாகவே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அந்த நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான உயர்நிலைப்பள்ளியை அடுத்த ஆண்டு அரசே எடுத்துக் கொள்ள இருப்பதால், அதற்குப் பிறகு ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை அதற்கு அதிகச் சங்கடங்கள் இருக்காது என்று கருதப்படுகிறது. ஆசிரியர்களுக்குத் துன்பம் ஏற்படாத அளவில் தான் அவர்களுக்குச் சம்பளம் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதாக அரசு வற்புறுத்தி வருகிறது.

அனந்தலிலுள்ள பள்ளிக் கட்டடம்

* 118 வினா.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா ஊராட்சி ஒன்றியம், அனந்தல் கிராமத்தில் ஆரம்ப துவக்கப்பள்ளி ஒன்று புதியதாக கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் திறப்பு விழா செய்தும் பள்ளி நடத்தப் படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அரசு அங்கீகாரமில்லாத ஊராட்சி ஒன்றிய ஆரம்ப துவக்கப் பள்ளி ஒன்று அனந்தல் கிராமத்தில் புதிய கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : 'அரசு அங்கீகாரம் பெறாத பள்ளி' என்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நல்ல கட்டடத்தில் இந்தப் பள்ளிக்கூடம் அமைந்தும்கூட, அந்த ஊரிலேயே உள்ள தனியார் பள்ளி நிர்வாகியின் செல்வாக்கினால்தான் இந்தப் பள்ளிக்கு இன்னும் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பதை அரசு உணர்ந்து, உடனடியாக இந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு குளத்தூரில் ஒரு ஆரம்பப் பள்ளியைத் துவக்குவதற்குத்தான் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அனந்தல் கிராமத்தில் ஏற்கனவே பல ஆண்டுகாலமாக ஒரு தனியார் பள்ளி

1972 சனவரி 29]

சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாகவும், அங்கே 350 மாணவர்கள் படிக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆனால் இந்த ஊராட்சி ஒன்றியத்தினர் கல்வி இலாக்காவின் அனுமதி இன்றியே அனந்தல் கிராமத்தில் ஒரு கட்டிடத்தைக் கட்டி குளத்தூரில் ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பள்ளியை இங்கே மாற்றியிருக்கிறார்கள். இந்தக் கட்டடத்தில் 76 பேர்களேதான் படிக்க வசதியும் இருக்கிறது. ஏற்கனவே தனியார் பள்ளியோ, ஊராட்சி ஒன்றியப்பள்ளியோ நடக்கிற இடத்தில் இருந்து 1 மைலுக்குள்ளாக வேறு ஒரு பள்ளியை அங்கீகரிப்பது இல்லை என்ற முறைக்கிணங்க இந்தப் பள்ளி அங்கீகரிக்கப்படவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : அந்தத் தனியார் பள்ளியில் 350 பேர்கள் படிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்தப் பள்ளியைப் போய்ப் பார்த்திருக்கிறேன். அவ்வளவு குழந்தைகள் படிக்கவில்லை. மேலும் அந்தத் தனியார் பள்ளி சாதாரண கீத்துக் கொட்டகையில்—அதுவும் கீழே மணல்—சுகாதார வசதியற்ற இடத்தில் நடக்கிறது. பஞ்சாயத்து யூனியன் சார்பில் கட்டப்பட்ட பள்ளி பக்கா கட்டடம். ஆகவே, மாணவர்களுடைய சுகாதார வசதி, மற்ற வசதிகளைக் கருதியாவது இந்தப் பள்ளிக்கு அரசு அங்கிகாரம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : என்னிடத்தில் தரப்பட்டுள்ள தகவல்படி தனியார் பள்ளியில் 350 பேர்கள் படிக்க இடமிருக்கிறது, இந்தப் பள்ளியில் 76 குழந்தைகளுக்குத்தான் இடமிருக்கிறது என்பது ஆகும். மேலும் பஞ்சாயத்து யூனியன் கட்டடம் சரியானதாக இல்லை, ஒழுக்கல் உள்ளதாக இருக்கிறது என்பதாகும். அதோடு கல்வி அதிகாரியின் அனுமதியின்றி குளத்தூரில் துவக்க அனுமதிக்கப்பட்டதற்கு அங்கே ஏற்படுத்தாது இங்கே மாற்றியிருக்கிறார்கள் என்பதும் ஒன்றாகும். இருக்கக்கூடிய பொது நிபந்தனைகளை நிறைவேற்றித்தர பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர்கள் முன்வந்தால் இந்தப் பள்ளிக்கு அங்கிகாரம் அளிப்பதிலும் சங்கடம் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம்

*** 119. வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு முதல் தேதி சம்பளம் கிடைப்பது போல் பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் மாதம் முதல் தேதியே சம்பளம் கிடைக்க அரசு ஆவன செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?